2021 செப்டம்பர் 9] [திரு. துரைமுருகன்]

ஆக, மண்பாண்டத் தொழில் செய்பவர்கள், செங்கல் சூளை வைத்திருப்பவர்கள் நிலமேம்பாட்டிற்காக மண் எடுப்பவர்கள், சாலைப் பணி என அனைத்திற்கும் இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கொடுத்திருக்கிறார் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

6. கவன ஈர்ப்பு

பண்ருட்டி, இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலங்கள் ஆக்கிரமிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள், அதில் என்ன எழுதிக் கொடுத்திருக்கிறீர்களோ அதை மட்டும் வாசித்துவிட்டு உட்காருங்கள். இன்னும் இரண்டு வாய்ப்புகள் வரும்.*

***திரு. தி. வேல்முருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "என்னுடைய பண்ருட்டி சட்டமன்றத் தொகுதியில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறைக்குச் சொந்தமான பல்வேறு கோயில்களுக்குச் சொந்தமான நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துகளையும், அதுபோன்று தனி அறக்கட்டளைகள் என்கிற பெயரிலும் பரம்பரை அறங்காவலர்கள் என்ற பெயரிலும் அவர்கள் ஆக்கிரமித்து அனுபவித்து வருவதோடு மட்டுமல்லாமல் காலி மனைகளை* real estate *ஆக மாற்றி விற்பனை செய்து வருகிறார்கள்", ஆதலால் . . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், இல்லை, நீங்கள் குறிப்பில் இருப்பதை மட்டும் வாசித்து விட்டுவிடுங்கள். அதாவது, பண்ருட்டி தொகுதியில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது. அவ்வளவுதான் வாசிக்கவேண்டும். மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுங்கள், (குறுக்கீடு) உங்களுக்கு கேள்வி*

இருக்கிறது. நீங்கள் பதில் சொல்லுங்கள், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், (குறுக்கீடு) உங்களுக்கு தருகிறேன். மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை மாண்புமிகு உறுப்பினர்கள் மேசையில் உள்ள கணினியில் கவன ஈர்ப்பு என்ற தலைப்பில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. அதனை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அறிக்கை

பண்ருட்டி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பண்ருட்டி நகரம் மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறைக்குச் சொந்தமான 152 திருக்கோயில்கள் மற்றும் 7 கட்டளைகள் உள்ளன. பண்ருட்டி வட்டத்தில் உள்ள 118 திருக்கோயில்கள் மற்றும் கட்டளைகளுக்குச் சொந்தமான நிலங்களின் அளவீட்டுப் பணிகள் மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற உத்தரவின்படியும், வருவாய்த் துறை ஆவணங்களின்படியும், திருக்கோயில்களுக்குச் சொந்தமான சொத்துப் பதிவேடு, 1–15 பதிவேடு மற்றும் இதர பதிவேடுகள்மூலம் செய்து முடிக்கப்பட்டுள்ளன.

மேற்கண்டவாறு அளவீடு செய்யப்பட்டு வரும் திருக்கோயில் நிலங்களில் 4 திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களில் 75 ஆக்கிரமிப்புதாரர்கள் கண்டறியப்பட்டு, 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறநிலைக்கொடைகள் சட்டம், விதி எண் 78–ன்படி சம்பந்தப்பட்ட திருக்கோயில் செயல் அலுவலர்களால் அறிக்கைகள் தயார் செய்யப்பட்டு, கடலூர் உதவி ஆணையர் பரிசீலனையில் உள்ளன.

இதனை அடுத்து, திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களை அளவீடு செய்யும் பணி தொடர்ந்து நடைபெற்றுவரும் நிலையில் விரைவில் ஆக்கிரமிப்புதாரர்களைக் கண்டறிந்து அவர்களிடமிருந்து திருக்கோயில் மற்றும் கட்டளைகளுக்குச் சொந்தமான நிலங்களை திருக்கோயில் வசம் சுவாதீனம் பெறவும், கட்டளை மற்றும் திருக்கோயில் பெயரில் பட்டா மாற்றம் செய்திடவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நிருவாகம் செம்மையாக நடைபெறாத அருள்மிகு திருவிக்கிரமநாராயண பெருமாள் திருக்கோயிலின் பகல் பத்து,

2021 செப்டம்பர் 9] [திரு. பி.கே. சேகர்பாபு]

இராப்பத்து முதல்நாள் உற்சவகட்டளை திருவதிகை, அருள்மிகு ரெங்கநாதசுவாமி திருக்கோயிலின் நன்னயபாணி திருவிழாவில் வைகாசி மாத பௌர்ணமி உற்சவ கட்டளை, மேலப்பாளையம் (வடகைலாசம்) கிராமத்தில் உள்ள இராமானுஜர் கூடத்தில் தேசாந்திகளுக்கு ததியாதாரணை தளிகை செய்தல் கட்டளை ஆகியவற்றின் பரம்பரை அறங்காவலர்கள் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் சட்டப் பிரிவு 53(2)-ன்கீழ் தற்காலிகப் பதவி நீக்கம் செய்யப்பட்டு, பண்ருட்டி சரக ஆய்வாளர் சட்டப் பிரிவு 53(4)–ன்கீழ் தக்காராக நியமனம் செய்யப்பட்டு, கட்டளை சொத்துகளிலிருந்து வாடகையாக 27–8–2021 அன்றைய தேதியில் ரூ.5,65,900/– (ரூபாய் ஐந்து இலட்சத்து அறுபத்தைந்தாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) வாடகையாக வசூல் செய்யப்பட்டு கட்டளையின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டு நிருவாகம் கவனிக்கப்பட்டு வருகிறது. கட்டளையின் சொத்துகளை தனி நபர்களிடமிருந்து மீட்கவும், கட்டளையின் பெயரில் மீண்டும் பட்டா மாற்றம் செய்திடவும் துறையின் சார்பில் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் அளிக்கப்பட்ட அறிக்கையினைப் படித்துப் பார்த்தேன். அதில் 118 திருக்கோயில்களுக்குச் சொந்தமான இடங்களில் தற்போது அளவீட்டுப் பணிகள் முடிக்கப்பட்டிருப்பதாகவும், 75 ஆக்கிரமிப்பாளர்கள் கண்டறியப்பட்டிருப்பதாகவும் தெரிவித்து, மேலும், பல அறக்கட்டளை, அறங்காவலர்களை suspend செய்து தக்கார் அவர்களை நியமனம் செய்து, தற்போது தரை வாடகை ரூ.5,65,900/– வசூல் செய்யப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11–45

மாண்புமிகு அமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டின் பலமுனைகளில் அதிரடியாக நடவடிக்கை எடுத்து அரசுக்குச் சொந்தமான கோயில் நிலங்களை மீட்டு, அரசின் கஜானாவிற்குக் கொண்டு வந்து கொண்டிருக்கிறார். அந்த அடிப்படையில் என் பண்ருட்டி தொகுதியில் பல காலி மனைகள் கோயில்களுக்குச்

சொந்தமானதாக இருக்கின்றன. அவற்றை தற்போது சிலர் அங்கு வீட்டு மனைகளாக மாற்றி விற்பனை செய்வதும், தரை வாடகையை தனி நபர்களுக்கு ஆண்டுக் கணக்கில் நீண்டகால குத்தகைக்கு விடுவதும், தனி நபர்கள் இலாபம் சம்பாதிப்பதும் தொடர்கதையாக இருந்து வருகிறது. தக்கார் அளவில் நியமனம் செய்யப்படுகிறவர்கள், இது சம்பந்தமாக சென்று ஒரு துண்டறிக்கையை விநியோகம் செய்வதற்குக்கூட, ஒரு notice serve செய்வதற்குக்கூட அனுமதிக்கப்படவில்லை. அவர்கள் மிரட்டப்பட்டிருக்கிறார்கள். நகர ஆணையாளர் அவர்கள் கொடுத்த புகார், காவல் நிலையத்தில் இதுவரை CSR–ல் இருக்கிறது. முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை. காவல் துறை துணையோடு, மற்ற இடங்களில் கட்டடங்களையெல்லாம் இடித்து, அதனை இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் சொத்தாக மாற்றியிருக்கிற நீங்கள், நூற்றுக்கணக்கான கோடி ரூபாய் மதிப்புள்ள இந்த காலி மனைகளை உடனடியாக காவல் துறை, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை மற்றும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறைகளின் துணையோடு கையகப்படுத்தி, அவற்றை அரசின், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வருவதற்கு போர்கால அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்வீர்களா என்பதை கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய அனைத்துமே கடந்த 125 நாட்களுக்கு முன்பு நடைபெற்ற சம்பவங்கள். மாண்புமிகு தமிழக முதல்வர், தளபதி அவர்களுடைய தலைமையிலே அமைந்திருக்கின்ற இந்த அரசானது, சட்டத்தின் ஆட்சி. யார் தவறு செய்தாலும் அதனை பாரபட்சமின்றி நடவடிக்கை எடுக்கின்ற ஓர் ஆட்சி. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டார், 118 இடங்களில் நில அளவை ஆய்வு செய்தேன். 75 ஆக்கிரமிப்பாளர்களைக் கண்டுபிடித்திருப்பதாகக் கூறினார். மொத்தம் இருப்பது 152 இடங்கள். அதில் 118–ல், 75 வரை வந்திருக்கிறது. மீதம் 34 இடங்களை நில அளவை ஆய்வு செய்ய இருக்கின்றோம். அதில் மேலும் ஆக்கிரமிப்புகள் கண்டுபிடிக்கப்பட்டால், உடனடியாக அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

2021 செப்டம்பர் 9] [திரு. பி.கே. சேகர்பாபு]

முதற்கட்டமாக அறக்கட்டளைக்குச் சொந்தமான 7 இடங்களில் ஆய்வு செய்யப்பட்டபோது, அதில் தவறு என்று கண்டறியப்பட்டவுடன் பரம்பரை அறங்காவலர் அறக்கட்டளையைச் சார்ந்தவர்களை நீக்கிவிட்டு, அதனுடைய சரக ஆய்வாளரை தக்காராக நியமித்து, சுமார் 5,65,900/– ரூபாயை அந்த அறக்கட்டளைக்குச் சொந்தமான இடங்களில் குடியிருப்பவர்களிடமிருந்து வசூல் செய்து, அதை திருக்கோயில் கணக்கில் வங்கியில் செலுத்த, அது முறையாக அறக்கட்டளைக்குச் செலவிடப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

அதேபோல், பட்டா மாற்றம் செய்திருப்பது கண்டறியப்பட்டு, உடனடியாக மாவட்ட ஆட்சியாளர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று, அந்தப் பட்டா மாற்றத்தையும் இரத்து செய்ய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கின்றார். ஆகவே, வெகு விரைவில் விதி எண் 78–ன்கீழ் தற்போது நடவடிக்கை எடுக்க துணை ஆணையாளர் பரிந்துரைத்திருக்கின்றார். அந்த 75 இடங்களையும் இன்னும் ஒரு மாதத்திற்குள் இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை தன் வசம் கைப்பற்றும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்களும் எந்த காகிதமும் கையில் இல்லாமல் இந்த அவை முடிகிற வரை, 2 மணி வரை பேச முடியும் என்பது எனக்குத் தெரியும். இன்றைக்கு விவாதத்தில் 10 உறுப்பினர்கள் பேசவிருக்கிறார்கள். ஆகவே, சுருக்கமாக ஒரு கேள்வி, சுருக்கமாக ஒரு பதில். மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன் அவர்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் எடுத்த நடவடிக்கைக்கு நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். இன்றுகூட நம்முடைய . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், நன்றி சொல்லி உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றுகூட நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்கள் notice serve செய்ய அந்த இடத்திற்குச் சென்றிருக்கிறார். அவர் மிரட்டப்பட்டு, அனுப்பப்பட்டிருக்கிறார். இன்றும் அவர்கள், தனி நபர்கள், தனி car, பேருந்துகளை நிறுத்தி வாடகை வசூல் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறைமூலம் ஏற்கெனவே காவல் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது. அந்தப் புகாரின்மீது நடவடிக்கை எடுத்து, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அந்த இடத்தை உடனடியாக தன் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்ற வேண்டுகோளை முன்வைத்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி.கே. சேகர்பாபு: இதற்கு பதில் சொல்லியே ஆக வேண்டும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆட்சியைப் பொறுத்தளவில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் இயங்குகின்ற காவல் துறையைப் பொறுத்தளவில், யாரும் உருட்டி, மிரட்டியெல்லாம் பணிய வைக்க முடியாது. யாராக இருந்தாலும், புகார் என்று வந்தால், அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும். இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறையைப் பொறுத்தளவில், வரலாறு காணாத வகையில் இன்றைக்கு நிலங்களைக் கையகப்படுத்திக் கொண்டிருக்கிறோம். தனியார் ஆக்கிரமிப்பில் மயிலையில் இருந்த சுமார் 46 ground இடம் 1,750 ரூபாய் மாத வாடகை என பல நிகழ்வுகளுக்கு அதனை வாடகைக்குவிட்டு, கோடிக்கணக்கில் பணம் சம்பாதித்துக் கொண்டிருந்தார்கள். 46 ground இடம், 200 கோடி ரூபாய் மதிப்புடைய அந்த நிலத்தை, இன்று மாலை கையகப்படுத்தவுள்ளோம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, நிலங்கள் மீட்பு என்ற வேட்டை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே தொடரும், தொடரும், தொடரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.